# VIRUDHUNAGAR GOVT MUSEUM

# ENTRANCE VIEW



# FRONT VIEW OF THE MUSEUM









# INTRODUCTORY GALLERY



# COPPER PLATE - PAVALI



# COPPER PLATE - PAVALI



விருதுநகர் மாவட்டம் பாவாலி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புப் பட்டயத்தின் விபரம்

1. ஶ்ரீ ஸ்ரீ ளதுய௲ அக்டோபர் மீ௳ய உசகாத்தம் சதளஉயக க்கு மேல் செல்லா நின்ற சித்தார்த்தி௵ அற்பசி மீ எ உதிருநெல்
2. வேலிச்சீமையுடனே சேர்ந்த பாளையப்பட்டு சீமைகளிலே யிருக்கப்பட்ட பாளையக்காறர் சகலவித குடியான பேர்க
3. ளுக்கும் தெரியும்படிக்கு விளம்பரம் பண்ணிவிக்கிறதுயென்ன வென்றால் மேசர் பேனர்மேன் துரையவர்கள் கும்பினி
4. யாரிடத்திலே பெற்ற உத்தரவினாலே தற்காலத்திலே கும்பினியாரவர்கள் திருநெல்வேலிச்சீமைகளிலே பாளையஞ்சே
5. கரிக்க அகத்தியம் உண்டானதும் பாஞ்சாலங்குறிச்சியா ஞேழாயிரம் பண்ணையான் நாகலாபுரத்தான் கோலார்ப
6. ட்டியான் காடல்குளத்தூரானிவர்களினவரும் அங்கு தப்பி துர்பார்க்க நடத்தைகளாக நடந்ததினாலே இவர்க
7. ளுடைய பாளையப்பட்டுகளைக் கட்டிக்கொள்ள நிமித்தியம் உண்டானதும் பாஞ்சாலங்குறிச்சிக்கட்டபொம்மனாய
8. க்கன் அவனுடைய தானாபதி சிவசுப்பிரமணியபிள்ளை நாகலாபுரத்துப் பாளையக்காரனுக்குத்தமையனாகவும் காரிய
9. ஸ்தனாகவுமிருந்த சவுந்திரபாண்டிய நாயக்கனிவர்களை யுயிரச்சேதமாக ஆக்கினை செய்ததும் மேசர்பானர்மேன்துரை
10. யவர்கள் நாகலாபுரம் யெழாயிரம்பண்ணைப் பாளையக்காறரையும் மின்னஞ் சிறிது முக்கியமாயிருக்கப்பட்ட மனுடர்களை
11. யும் அவரவர் பாளையக்கட்டுகளை நீக்கிவச்சச் சென்னை பட்டணத்துக்கு அனுப்பி விக்கும்படி நிமித்தியம் உண்டானதும் பா
12. ளையப்பட்டுகளிலுள்ள கோட்டைகளையெல்லாமிடித்து அதிலுள்ள சேர்வைக்காரர் சேவகர் குடியானபேர்கள் கையிலுள்
13. ள ஆயுதங்களையும் வாங்கிக்கொள்ள நிமித்தியம் உண்டானது மித்தியாதிக்காரியங்களெல்லாமிதற்கு முன்வகை விபரமா
14. க விளம்பரப்படுத்திய விளம்பரங்களினாலே சகலமான பேர்களுக்கும் தெரியப்படுத்த லோகபிரசித்தமாய் தெரியப்பட்டிருக்குமேயின்ன
15. ங் கீழே எழுதப்பட்ட காரிய குணங்களையெல்லாம் சகலமான பேர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியது மேசர்பானர்மேன்
16. துரையவர்களுக்கு நிமித்தியமாய்தோணி விளம்பரம்பண்ணிவிக்கிறது யென்னவென்றால் யினிமேல்பட்டு யாதாமொரு
17. பாளையக்காரன் மறுபடி கோட்டை கொத்தளமுடையங்கள் போட்டாலும் பிரங்கி ரெக்குலாசர்கோபி மற்றதுகள் வைத்திருந்த
18. லு மித்தியாதிகளைச்சம்பாதித்தாலுமிவர்கள் கும்பினியாருடைய ஆதரவுகளையுமிழந்து அவர்களுடைய பாளையப்பட்டுகளையும்
19. கும்பினியார் கட்டிக்கொண்டு அந்த பாளையக்காரனையும் கும்பினியாருக்கு தோணினபடி தெண்டிப்பார்கள் பாளையப்பட்டுக்க
20. ளிலுள்ள சேர்வைக்காரர் சேவகர் காவல்காறர் குடியான பேர்களிந்தவித மனுடர்களில் யாதாமொரு மனுடர்களானாலும் து
21. ப்பாக்கியாகிய கல்வெடி திரிவெடி யீட்டி வல்லயங்கள் பிடித்த பேர்களைக் கண்டாலுமிதுகளை யொளித்துவைத்திருந்த பேர்களைக்
22. கண்டாலுமவர்களை யுயிர்சேதம் பண்ணுவார்கள் அந்தந்த பாளையக்காரர்களுடைய பாளையப்பட்டுக்குடியான பேர்
23. களுடைய நடத்தைகளுக்கு அந்தந்த பாளையக்காரர் தாமே உத்திரவாதம் பண்ணவேணும் அதல்லாமலும் யாதாமொரு பாளை
24. ய காறனுடைய சனங்களாயுதபாணிகளாம் பெந்தச் சீமைகளிலேயாகிலும் சவாரியங்களும் பெலபந்தங்களும் செய்கிறதை
25. க் கண்டாலந்த சனங்களுக்கு உயிர்ச்சேதமாகிய தெண்டனையும் நடக்கிறது மல்லாமலந்த சனங்களுடைய பாளையப்
26. பட்டுப்பாளையக்காறனுடைய சீமைகளையுங் கட்டிக் கொண்டு அந்தப் பாளையக்காறனைக்கும்பினியாருக்கு தோணின தண்டனையும் நட
27. ப்பிவிப்பார்களின்னமறிய வேண்டியதென்னவென்றால் மேசர்பானர்மேன் துரையவர்கள் பெற்ற உத்தரவுக்காக நடத்திவிச்ச
28. காரியங்களையும் சீமைக்கு சவுக்கியமாகும்படியாய் மேலெழுதியிருக்கப்பட்ட சட்டங்களையும் சகலவிதமான சனங்களுக்குமிப்
29. போதைக்கு யினிமேலென்றைக்கும் அறிந்து மனதிலே வைக்க வேண்டியதுமிதவும் ஆயத்தமாய் அகத்தியமாயிருக்கப்ப
30. ட்டதான படியினாலேந்த விளம்பரத்தையொரு செப்புத் தகட்டிலே எழுதி அந்தந்த பாளையப்பட்டு தலைக்கிறாமங்க
31. ளில்ப்பிரபலமாயிருக்கப்பட்டயிடங்களிலே அடிக்கும்படியாய் உத்திரவாச்சது அதுவுமிபவும் இந்தப்படிக்கு மேசர்
32. பானர்மேன் துரையவர்கள் உ

T;A.BANNERMAN;
MAJOR

# PERUNTHALAIVAR KAMARAJAR - I



# PERUNTHALAIVAR KAMARAJAR - II



# INDUSTRIAL GALLERY - I



# INDUSTRIAL GALLERY - II



# COINS



# PAINTINGS GALLERY



# GROUND FLOOR - GALLERY



# WEAPONS



# FOLK ART



# MEDICINAL PLANTS IN VIRUDHUNAGAR DISTRICT



# EDUCATIONAL ACTIVITIES OF VIRUDHUNAGAR GOVERNMENT MUSEUM

## Earth Day – Kolam Exhibition



பூமி தினத்தை முன்னிட்டு விருதுநகர் அருங்காட்சியகத்தில் கோலமிட்டு அலங்கரித்த மாணவிகள். அடுத்தபடம்: சிவன் கோயிலில் சிவலிங்க கோலமிட்டு தீபம் ஏற்றிய பெண்கள்.

# பூமி தினத்தை அலங்கரித்த கோலங்கள்

விருதுநகர், ஏப். 23

விருதுநகர் அருங்காட்சியகத்தில் பூமி தினத்தை முன்னிட்டு கோல கண்காட்சி நடந்தது. ஆற்றலின் வடிவமாக விளங்குபவள் அன்னை பூமி. அவளின் அளப்பரிய ஆற்றலை நம் நாட்டினர் ஆண்டுதோறும் மரியாதை செலுத்தி வணங்கி வருகிறோம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் விதவிதமான பெயர்களில் அலங்கரிக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகிறாள். அந்தவகையில் தமிழகத்தில் விதவிதமான கோலங்கள் வரைந்து பூமித்தாயை அலங்கரிப்பர்.

விருதுநகரில் அருங்காட்சியகம், சம்ஸ்கார் பாரதி இலக்கிய வட்டம் இணைந்து கோல கண்காட்சி நடத்தினர். இதே போன்று சிவன் கோயிலிலும் திருமுறை மன்றம், மாதர் தெய்வநெறி கழகம் அமைப்பு சார்பிலும் கோல கண்காட்சி நடந்தது. திரளான பெண்கள் பங்கேற்று நவதானியம், அரிசி, வெற்றிலைபாக்கு, விளக்கு உள்ளிட்ட பல வித கோலங்களுடன் வண்ண ரங்கோலி கோலங்கள் பூமியை அழகுப்படுத்தினர். தெய்நெறி மாதர் கழக தலைவர் விஜயலெட்சுமி, காப்பாளர் கிருஷ்ணம்மாள் பங்கேற்றனர்.



# பூமித்தாயை போற்ற ஓர் தினம்: கோலமிட்டு அலங்கரித்த மங்கையர்கள்

### மண்வாசனை நிறைந்த பூமி

### பூமியை வதைக்காதீர்கள்

### வண்ண வண்ணமாய்

### பூமி ஒரு பெண்

# International Museum Day – Traditional Things Exhibition



# Summer Camp

## கோடையில் ஓர் புத்துணர்வு பயிற்சி
## அருமை பணியில் அருங்காட்சியகம்

**விருதுநகர்**

கோடை விடுமுறை என்றாலே குழந்தைகளுக்கு குதூகலம் தான். ஆனால் பெற்றோருக்கோ பெரும் தலைவலி தான். கட்டுக்கு குழந்தைகள் விடுமுறையில் செய்யும் சேட்டைகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆசைப்பட்டதை அடம்பிடித்து கேட்பார்கள். வெயிலில் சுற்றுவார்கள்.

இதனாலே பல பெற்றோர் குழந்தைகளை கோடை சிறப்பு வகுப்புகளுக்கு அனுப்புவதில் மும்முரம் காட்டுகின்றனர். கோடையை பயனுள்ள முறையில் பயன்படுத்த விருதுநகரில் ஒவ்வொரு ஆண்டும் அருங்காட்சியகம் சார்பில் இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

அதன்படி இந்தாண்டு பயிற்சி வகுப்பில் பேப்ரிக் பெயின்டிங் எனப்படும் துணிகளில் ஓவியம் வரையும் முறையில் ஸ்டென்சில் பெயின்டிங் எனப்படும் அச்சுகள் மூலம் எவ்வாறு ஓவியம் வரைவது என கற்று கொடுக்கப்பட்டது. இம்முறை மூலம் மாணவர்கள் உருளைக்கிழங்கு, வெண்டை, பல்லாரி வெங்காயம் போன்ற அச்சுகளை பயன்படுத்தி ஓவியம் வரைந்தனர்.

தொடர்ந்து அடுத்த நாள் மரபோடு விளையாடு எனும் பெயரில் பழங்கால விளையாட்டுகளை கற்றுக் கொடுத்தனர். பம்பரம் சுற்றுதல், பல்லாங்குழி, தாயம், செப்புச்சாமான், நொண்டியாட்டம், பச்சைக்குதிரை, பூப்பறிக்க வருகிறோம், கிச்சு கிச்சு தாம்பாளம், குலை குலையாய் முந்திரிக்காய் விளையாடும் கற்றுக் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்கள் தாங்களே விளையாடவும் செய்தனர். 21ம் நூற்றாண்டில் பிறந்த குழந்தைகளுக்கு பழங்கால விளையாட்டுகள் பெயர் தெரிந்திருக்கும்.

ஆனால் எப்படி விளையாட வேண்டும் என தெரிந்திருக்காது. அவை இந்த பயிற்சி வகுப்புகள் மூலம் கற்று தரப்பட்டது குறிப்பிடத்தக்கது. பென்சில் ஓவியம், பென் ஓவியமும் ஒரே நாளில் சிறந்த நுணுக்கங்களுடன் கற்று தரப்பட்டது. இறுதியாக வாழ்த்து அட்டை செய்வதும் கற்று தரப்பட்டது. இந்த பயிற்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமானவை.

இந்த பயிற்சிகள் மூலம் மாணவர்களின் தனித்திறமை, பன்முகத்திறமை வளர்கிறது. இதில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், இல்லத்தரசிகள் பங்கேற்றனர். அலைபேசியில் மூழ்காமல் கோடையை பயனுள்ள விதமாய் போக்க மாணவர்களும் முன்வர வேண்டும்.







### பயனுள்ள பயிற்சி முகாம்



ஸ்டென்சில் பெயின்டிங் கற்றதன் மூலம் என் ஆடைகளில் நானே எனக்கு பிடித்த வடிவமைப்பில் ஓவியம் வரைந்து கொள்கிறேன். என் உறவினரின் பிறந்த நாள் நெருங்குகிறது. அழகான வாழ்த்து அட்டையை செய்து அவர்களுக்கு கொடுப்பேன். இந்த கோடை பயிற்சி முகாம் எனக்கு பயனுள்ளதாக இருந்தது.

**தர்ஷன் பிரபு, பள்ளி மாணவர், விருதுநகர்.**

### விருப்பத்தோடு வந்தேன்



குழந்தைகளுக்கு நடக்கும் இப்பயிற்சியில் வர முதலில் தயங்கினேன். பின் என்னுடன் பல இல்லத்தரசிகள் வர துவங்கியதால் விருப்பத்தோடு வந்தேன். ஓவியம் வரைய கற்று கொண்டுள்ளேன். கட்டாயம் என்னுடைய மாணவர்களுக்கு நான் கற்றுக் கொண்டதை வெளிப்படுத்துவேன். பழங்கால விளையாட்டுகள் விளையாடும் போது இங்குள்ள குழந்தைகள் அலைபேசியை மறந்து போகும் அளவுக்கு மகிழ்ச்சியுடன் விளையாடியதை பார்த்தேன். இதே போன்று என் மாணவர்களுக்கு கற்று கொடுப்பேன்.

**சாந்தி, ஆசிரியை, விருதுநகர்.**

### சிறப்பாக வரைகிறேன்



துணிகளில் வரையும் பேப்ரிக் பெயின்டிங் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நன்றாக வரையும் ஆர்வம் இருந்தது. இங்கு வந்த பின் இன்னும் சிறப்பாக வரையும் நுணுக்கங்களை கற்றுக் கொண்டேன். எனக்கு பல்லாங்குழி எப்படி விளையாட வேண்டுமென்றே தெரியாது. பலரிடம் கேட்டு பார்த்தேன். இங்கு வந்த பின் தான் பல்லாங்குழி விளையாட கற்றுக் கொண்டேன்.

**ஜெயதுர்கா, பள்ளி மாணவி, விருதுநகர்.**

### கற்றதை கற்று கொடுப்பேன்



வாழ்த்து அட்டைகள் தயாரிப்பது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என்னதான் எஸ்.எம்.எஸ்., வாட்ஸ் ஆப் வந்தாலும் வாழ்த்து அட்டைகள் என்றும் விசேஷமானவை. காய்கறிகள் மூலம் அச்சு வைத்து வண்ணங்கள் தீட்டியது மிகவும் பிடித்திருந்தது. நிச்சயம் நான் கற்ற விஷயங்களை பிறருக்கு கற்று கொடுப்பேன்.

**சவுந்தர்யா, பள்ளி மாணவி, விருதுநகர்.**

### மனவளத்தை மேம்படுத்தும்



இளைஞர்கள் தங்களையும் மறந்து அலைபேசிகளுள் மூழ்கும் நேரத்தில் இது போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவது சிறந்தது. பழங்கால விளையாட்டுகள் மனவளத்தை மேம்படுத்தும். வாழ்த்து அட்டைகளை தாமே செய்து பிறருக்கு வழங்குவது அவர்களுக்கு என்றும் நினைவில் இருக்க செய்யும். கட்டாயம் இனி யார் பிறந்த நாள் வந்தாலும் வாழ்த்து அட்டைகள் மூலமே வாழ்த்துவேன்.

**சுவேதா, கல்லூரி மாணவி, விருதுநகர்.**

# World Music Day – Musical Instruments Exhibition & Musical Event





# Perunthalaivar Kamarajar Birthday – Kamarajar - Special Exhibition & Competition



# Independence Day –
# Essay, Drawing, Speech & Poem Competition



# World Tourism Day – Tourism Awarness Rally, Campus Cleaning and 'Forts in Tamilnadu' - Special Exhibition









# World Philately Day – Philately Exhibition





தினமலர்
மதுரை | சனி | 12.10.2019



## பெருமைகளை எடுத்துரைக்கும் தபால் தலைகள் கண்காட்சியை கண்டு வியந்த பள்ளி மாணவர்கள்

விருதுநகர்

தென் மாவட்டத்தின் பிரம்மாண்ட பர்னிச்சர் ஷோரூம்
தீபம் பர்னிச்சர்
தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை
இராஜபாளையம். ✆ 89033 31322

### இளைஞர்களும் உணரவேண்டும்

விருதுநகரில் தபால் சேவை முக்கியத்துவம் பெற்று வருகிறது. இன்னும் பல முதியவர்கள் தபால் சேவைக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர். தபால் தினத்தை முன்னிட்டு தபால் துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. பல தலைவர்களின் பெருமைகளை தபால் தலைகள் தான் எடுத்துரைக்கிறது. பொதுமக்கள், இளைஞர்கள் தபாலின் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

-ஸ்ரீராமன், முதுநிலை கோட்ட கண்காணிப்பாளர், விருதுநகர்.

### காலத்தின் அளவுகோலாய்

தபால் தலைகளை பழமையை பறைசாற்றுவதுடன் பல தகவல்களையும் பரிமாறுகிறது. காலத்தின் அளவுகோலாய் செயல்படுகிறது. பலதரப்பட்ட நாடுகள் தபால் தலை வெளியீட்டில் தன் பாரம்பரியத்தை காட்டி வருகிறது. நாமும் தபால் தலை சேகரிப்பிலும், பிற தபால் சேவைகளிலும் நம்மை ஈடுபடுத்தி கொள்ள வேண்டும்.

-காதர் உசேன், தபால்தலை சேகரிப்பாளர், மதுரை.

### தொன்மையை உணர்ந்தேன்

விருதுபட்டி தபால் அட்டை மூலம் விருதுநகரின் தொன்மை உணர முடிந்தது. காந்திக்காக 142 நாடுகள் தபால் தலை வெளியிட்டிருப்பது வியப்பை தருகிறது. தபால் தலை சேகரிப்பில் ஈடுபட ஆசையாக உள்ளது. தற்போது ஸ்மார்ட் போன் வரவால் மாணவர்கள், இளைஞர்கள் இணைய உலகத்தில் மூழ்கி இருக்கிறோம். நிச்சயம் இதில் இருந்து வெளிவந்து தபாலின் உன்னதத்தை அறிய வேண்டும்.

-கார்த்திக், மாணவர், சுப்பையாநாடார் ஆண்கள் மேல்நிலை பள்ளி, விருதுநகர்

### கடிதங்கள் எழுதுவோம்

விருதுநகர் அருங்காட்சியகத்தில் நடந்த கண்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தபால் தலைகளில் பல்வேறு தகவல்கள் பொதிந்துள்ளன. அலைபேசி வரவால் கடிதம் எழுதுவது குறைந்து வருகிறது. பள்ளி, கல்லூரி படிப்பவர்களை தவிர பிற பொதுமக்களும் எழுத வேண்டும். அந்த காலத்தில் எழுதப்பட்ட கடிதங்களுக்கு ஓர் உயிர் இருந்தது. தற்போது கடிதங்களே இல்லாத சூழல் ஆகிவிட்டது. முடிந்த அளவுக்கு கடிதங்கள் எழுதுவோம்.

-புஷ்பராணி, மாணவி, சங்கரலிங்கநாடார் பெண்கள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர்.

# Childrens Day
# – Drawing Competition

தினகரன் மாவட்டம்

## குழந்தைகள் தின ஓவியபோட்டி

விருதுநகர், நவ.15: விருதுநகர் அரசு அருங்காட்சியகத்தில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு 1 முதல் 5, 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கான ஓவிய போட்டி நடைபெற்றது. 35 பள்ளிகளை சேர்ந்த 147 மாணவ, மாணவியர் கலந்துகொண்டு தங்களது திறமைகளை காட்டினர். 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான போட்டியில் அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி மாணவி சிவதர்ஷினி முதல் பரிசு, கேவிஎஸ் மெட்ரிக் பள்ளி மாணவன் மாதேஸ்வரன் இரண்டாம் பரிசு, சிவகாசி கார்நேசன் காலனி ஆரம்ப பள்ளி மாணவி பிரியதர்ஷினி மூன்றாம் பரிசு பெற்றனர்.

6 முதல் 8ம் வகுப்பு வரையிலான ஓவிய போட்டியில் சிவகாசி அரிமா மெட்ரிக் பள்ளி மாணவன் சங்கரபாண்டியன் முதல் பரிசு, வடமலைக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவி சாதனா இரண்டாம் பரிசு, சிவகாசி கம்மவார் மெட்ரிக் பள்ளி மாணவி மகாஸ்ரீ மூன்றாம் பரிசு பெற்றனர். போட்டியின் நடுவர்களாக ஓவியர் தமிழ்க்கனி, ஓவியர் மோகனன் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் கிருஷ்ணம்மாள் செய்திருந்தார்.

வண்ணம் தீட்டும் மாணவர்கள்



# Pongal Festival – Kolam Competition





# கீழடி முதல் கி.பி. வரை – பண்டைய கால மகளிர் அணிகலன்கள் - கண்காட்சி



# THANK YOU